வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.08.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 222 பக்கங்கள் : 12

## ஜனாதிபதித் தேர்தல்:

# தமிழ் பொது வேட்பாளராக அரியநேத்திரன் அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 09

**நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பாக்கியசெல்வம் அரிய நேத்திரன் அறிவிக்கப்பட்டுள்ளார். பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அரியநேத்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளால் அரசியலுக்கு 2004ஆம் ஆண்டு அழைத்து வரப்பட்டவர்.**



தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

நாட்டின் 9ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெற வுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் - வேணவாக்களை நாட்டுக்கும்-சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தவும் தமிழ் மக்கள் தனித்துவமான இனம் அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்பதை பறைசாற்றும் - ஓர் அடையாளமாக தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்று முடிவு எட்டப்பட்டது.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், சிவில்

11

## தமிழ் தேசிய குறியீடாகவே நான் போட்டியிடுகின்றேன்!

### தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

யாழ்ப்பாணம், ஒக. 09

தமிழ்த் தேசியத்துக்கான குறியீடாகவே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன் - நான் வெறும் அடையாளம் மட்டுமே. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்காக நான் தேர்தலில் போட்டியிடவில்லை - இவ்வாறு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது

11


## மாவையிடம் ஆசி பெற்ற தமிழ்ப் பொதுவேட்பாளர்!

யாழ்ப்பாணம், ஒக. 09

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கும் பா. அரியநேத்திரன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவிடம் ஆசீர்வாதம் பெற்றார்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் சிவில் அமைப்புகளின் ஒன்றிணைவான தமிழ் மக்கள் பொதுக் கட்டமைப்பு ஆகியன இணைந்து எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை

11



## நல்லூரானுக்கு இன்று கொடி!

யாழ்ப்பாணம், ஒக. 09

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.45

11

## தமிழ்ப் பொது வேட்பாளர் சுயேச்சையாகவே போட்டி

### சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 09

தமிழ்ப் பொது வேட்பாளர் சுயேச்சையாகவே தேர்தலில் போட்டியிடுவார் என்று பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளராக

11

## பிரதமர் பதவியை ஏற்க எனக்கே அழைப்பு வந்தது

### விஜயதாஸ ராஜபக்ஷ சொல்கிறார்!

கொழும்பு, ஒக. 09

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமக்கு பிரதமர் பதவியை வழங்க முன்வந்தார். பெரமுன கட்சியினராலேயே ரணிலுக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது - என்று முன்னாள் நீதி அமைச்சரும் ஜனாதிபதி வேட்பாளருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

11



## ஐக்கிய மக்கள் கூட்டணி சஜித் தலைமையில் உதயம்!

கொழும்பு, ஒக. 09

சஜித் பிரேமதாஸவை தலைவராகக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஒப்பந்தம் நேற்று வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நடைபெற்றது. இதில், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திர கட்சியின் தயாசிறி ஜயசேகர

11

## வடக்கின் சகல மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சை பிரிவை நிறுவுங்கள்!

### வடக்கு மாகாண ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 09

வடக்கின் அனைத்து மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சை பிரிவை நிறுவுமாறு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் மாகாண ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், மாகாண சுகாதாரத் துறையில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பொறிமுறை மாற்றம் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும்

11

## இலக்கத்தகடுகளை பகிரங்கப்படுத்துக!

கொழும்பு, ஒக. 09

கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழியில் மீட்கப்பட்ட இலக்கத் தகடுகளை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் ஊடாக விண்ணப்பித்துள்ளனர்.

11

## நிகழ்நிலை காப்பு சட்ட திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பணம்!

கொழும்பு, ஒக. 09

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தின் திருத்தச் சட்டமூலம் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சட்டமூலத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பில் சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த சபையில் சமர்ப்பித்தார்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய ஆலோசனைகளுக்கு அமைய குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், 2024 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ் நிலைக் காப்புச் சட்டம் தற்போது வலுவுடையதாக உள்ளது.

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தான் நடத்திய அரசியல் கருத்தாய்வு கூட்டத்தில் தமிழ் அரசு எம். பி. சுமந்திரன் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஆற்றிய உரை பலருக்கும் ஞாபக மிருக்கலாம்.

அப்போது அவர் கூறினார், "அரசியல் ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளுடன் நின்றுவிடவேண் டும். அரசியல் விடயங்களை நாங் கள் அரசியல்வாதிகள் பார்த்துக்கொ காள்கின்றோம்", என்று. அப்போது அவரின் பேச்சுக்காக கைதட்டிய வர்களுக்குத் தெரியாது, ஜோசப் பரராஜசிங்கம், அரியநேத்திரன் என்று விடுதலைப் புலிகளின் விருப்பத்துடன் அரசியலில் முதன் மைப்படுத்தப்பட்டவர்கள் எல்லோ ரும் முன்னாள் ஊடகவியலாளர் கள்தான் என்பது. அரசியல்வாதி என்பவர் அரசியல்வாதியாகவே பிறந்து வந்தவர் அல்லர். அதிகம் ஏன், இன்றும் பல ஊடகவியலா ளர்கள் பாராளுமன்ற நடைமுறை களை சில எம். பிக்களைவிட விபரமாக அறிந்து வைத்திருக்கி றார்கள். நண்பர் மாலி, அண்ணர் வீரகத்தி தனபாலசிங்கம் போன்ற வர்கள் நீண்டகாலம் பாராளுமன்ற செய்தியாளர்களாக பணியாற்றிய வர்கள்தான்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டதாக நமது சுமந்திரன் தனது முகநூல் ஊடாக அறிவித்திருந்தார். அது இரண்டாம் வாசிப்புக்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்டதே தவிர, அது நிறைவேற்றப்படவில்லை என்று பாராளுமன்ற செய்தியாளராக நீண்டகாலம் பணியாற்றிய மற்று மொரு மூத்த ஊடகரான அ. நிக்சன் தெளிவுபடுத்தியிருக்கிறார். அது மட்டுமல்ல, அதுபற்றிய நேரடி விவாதம் ஒன்றுக்கும் அவர் சுமந்திர னுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக அ. நிக்சன் தனது முகநூலில் எழுதி யிருக்கின்ற விடயத்தை இந்தப் பத்தியில் அப்படியே தருவது பொருத்தமானதாக இருக்கும் என்பதால் அதனை அப்படியே கீழே தருகின்றேன்.

"மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீள இயங்கச் செய்வதற் காக உங்களால் (சுமந்திரனால்) செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப் பட்ட தனிநபர் சட்டமூலம் நிறை வேற்றப்படவில்லை.

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதுதான் மிகச் சரியான சொற்பதம்.

ஆனால், நிறைவேற்றப்பட் டுள்ளதாக மின் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. உங்களுடைய அனுமதியுடன் அச்செய்தி பிரசுரமாகியதை நீங்கள் சமூக வலைத்தளத்தில் உறுதி செய்துள் ளீர்கள். எந்த ஓர் இடத்திலும் நிறைவேற்றப்பட் டுள்ளதாக சபாநாயகர் கூற வில்லை என்பதை நீங்கள் வெளி யிட்டுள்ள காணொலியே சாட்சி யாகிறது.

"நிறைவேற்றப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்டுள்ளது" என்று விளக்கமளித்து எனது முகநூலில் நான் செவ்வாய்க்கிழமை பதிவிட்டி ருந்தேன்.

அதற்கான மறுப்பாகவே உங்கள் சமூகவலைத்தளப் பதிவு அமைந்துள் ளது.

சட்டத்தரணி என்பதால் நீங்கள் சொல்வதெல்லாம் சரி என்பதல்ல. உங்களைச் சுற்றியுள்ள சிலருக்கு நீங்கள் கதை சொல்லலாம். அக்கதைகளை அவர்களும் நம்ப லாம். ஆனால், என்னைப் போன்ற பலர் உங்கள் கதைகளை அதாவது, நான் சட்டத்தரணி - நான் சொன் னால் சரி என்ற உங்கள் மாறுபட்ட முரண் வாதம், என்னைப் போன்ற பலரிடம் செல்லுபடியாகாது.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் சட்டங்கள் பற்றி சாதாரண மக்க ளுக்கு விளக்கம் இருக்காது. அதனால், நீங்கள் கதை சொல்லி ஏமாற்ற முற்படக்கூடாது. ரணில் பிரதமராக இருந்தபோது தயாரித்த அரசியல் யாப்புக்கான நகல் வரைவில் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி முறைமை உண்டு என்று வியாக்கியானம் செய்தவர்தானே நீங்கள்?

ஆகவே, எதுவாக இருந்தாலும் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நீங்கள் என்னுடன் விவாதத்துக்கு வாருங்கள். சரி எது பிழை எது என்பதை நான் நாகரிகமாக உங்க ளுக்கும் - உங்களை நம்புகின்ற சிலருக்கும் நான் ஊடக மொழியில் தெளிவுபடுத்துகிறேன். தொடர்ச்சி யாக மக்களை எவரும் ஏமாற்ற முடியாது. ஈழத் தமிழர்களின் "அரசியல் விடுதலை" விவகாரம் வேறு. இலங்கை ஒற்றையாட்சி சட்டங்கள் வேறு. சர்வதேச சட்டங்கள் மற்றொரு வகை.

இவற்றையெல்லாம் புரிந்து கொண்ட தமிழ் சட்டத்தரணிகள் மிகச் சிலரே.

அன்றிலிருந்து இன்று வரை தமிழ் சட்டத்தரணிகள் பலர் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை அரச கட்டமைப்பை நியாயப்படுத்தியும் தாங்கள் சொன்னால் சரி என்ற இறுமாப்புடனுமே செயல்பட்டிருக் கின்றனர்.

இதற்கெல்லாம் காலம் பதில் சொல்லும்.

சுமந்திரன் அவர்களே!

மாகாண சபைகளை மீள இயங்கச் செய்வதற்கான உங்கள் தனிநபர் பிரேரணை நிறைவேற்றப் பட்டுள்ளது என்று அவசரமாகவும் தவறாகவும் பிரசாரப்படுத்தும் உங்கள் நோக்கம் என்ன?

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது 2019இல் மாகாண சபைகளுக்குரிய தேர்தல்கள் நடத்தப்படாமல் நிறுத்தப்பட்டதல் லவா? அப்போது நீங்கள் அவருடன் தேனிலவில் இருந்தீர்கள்தானே?

இப்போது ரணில் ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் நிலையில் ஏன் இந்தத் தனி நபர் சட்டமூலம்? எத்தனை காலத்துக்கு இந்தத் தோல் போர்த்திய அரசியல்?".

மேற்கூறப்பட்டவையே நிக்சனின் பதிவு. இந்த ஊர்க்குருவி கேட்க நினைத்த பல விடயங்களை அவர் கேட்டுவிட்டதால் இந்தப் பத்தியில் மேலும் இதுபற்றி எழுதவேண்டியதில்லையே.!

- ஊர்க்குருவி.

## வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு!







படங்கள் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், ஒக. 09

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற் சவ பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாய பூர்வமாக கொடி யேற்றத் துக்கான கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆல யத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விஷேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய தேரில் பருத்தித்துறை வீதி ஊடக எடுத்து செல் லப்பட்டு காலை 10.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்தது.

அங்கு ஆலயத்தின் வெளி வீதி உலா சென்று சுபநேரத்தில் பூஜைகள் இடம் பெற்று கொடிச் சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூர் ஆலய கொயேற்றத்திற்கான கொடிச்சீலை செங்குந்த மரபினரால் சம்பிர தாயபூர்வமாக ஆலயத்தில் கையளிக்கப் பட்டு வருகின்றமை பாரம்பரிய வழக்கமா கும். (அ)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக. 09

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண் முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்கா மன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடை பெற்று வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையு ரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயா நாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற் பொழிவை சைவப்புலவர் செ. த. குமரன் "சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்வும் வாக்கும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 09

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற் படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர் காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

17ஆவது தொடராக நடக்கும் இந்த சொற்பொழிவு தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற வுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "மாணிக்கவாச கரும் அன்னைப் பத்தும்" என்னும் தலைப் பில் ஆற்றுவார். (ஐ)

• • •

ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கு - பண்டாரப்புலம் தான்தோன்றி மனோன் மணி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு நடை பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் இந்த சொற்பொழிவு எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் இரவு 7 மணிக்கு ஆலயத்தின் பிரதான மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவநெறி பிகாசர் கதிர்காமன் நிஜலிங்கத் தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்தத் தொடர் சொற்பொழிவை இளம்சைவப்புல வர் க. கயிலைவாசன் "சைவ வாழ்வியலில் திருவாசகம்" என்னும் தலைப்பில் ஆற்று வார். (ஐ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்புற நடந்தது அருளுரை!

வடமராட்சி, ஒக. 09

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டை மானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நேற்று புதன்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருள் உரை நிகழ்த்தப்பட்டது.

"வினை தீர்ப்பான் வேலன்" என்ற தலைப் பில் அருளுரையை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேரவை உறுப்பின ரும் ஆசிரியரும் சைவப்புலவருமான க. கயி லைநாதன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர். (ஐ)

## நல்லூர் பெருந்திருவிழா சிறப்பு நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஒக. 09

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வு களை ஒழுங்கு செய்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண் டபத்தில் தினமும் பிற்பகல் 4 மணி முதல் 8 மணி வரை இந்த நிகழ்வுகள் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்வு நல்லை திருஞானசம் பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமி கள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச் சுடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையா ளர் கலாநிதி பா. தனபாலன் தலைமையில், யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஷ் ணேந்திரன் பிரதம அதிதியாகவும் யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறை விரிவுரையாளர் கலாநிதி இ. ஜெயந்திரன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள் ளனர்.

இதில், நல்லூர் சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறி பாடசாலை, வண்ணை காமாட்சி அம்பாள் அறநெறி பாடசாலை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் அற நெறி பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிக ளும் விசேட நிகழ்வாக இணுவையூர் சிறீ வள்ளி வில்லிசைக் குழுவினர் வழங்கும் "வந் தான் வடிவேலன்" வில்லிசை நிகழ்வும் நடை பெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருந்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.08.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆடி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பொது வேட்பாளர் அறிவிப்பு

யாரந்த தமிழ் பொது வேட்பாளர் என்னும் கேள்விக்கான பதிலை தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு வெளியிட்டிருக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கின்றார். இங்கு நபர் என்பதன் முக்கியம் மிகவும் குறைவானது - அவர் எந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் போட்டியாளராக நிறுத்தப்பட்டிருக்கின்றார் என்பதுதான் முக்கியமானது.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான பதினைந்து வருடகால அனுபவத்தின் விளைவுதான் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடாகும். பின் - யுத்த காலத்தின் மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் தமிழ் மக்களின் வாக்குகள் ஒரு தென்னிலங்கை வேட்பாளரை நோக்கித்தான் திரட்டப்பட்டன. ஒரு வேட்பாளரை நோக்கி மக்கள் வாக்களிப்பதானது குறியீட்டு ரீதியில் இலங்கைத் தீவின் நல்லிணக்க முயற்சிகளுக்கான ஆதரவையும் ஈடுபாட்டையும் காண்பிப்பதுதான்.

பொதுவாகத் தேர்தல்களின்போது, ஒன்றைக்காட்டி இன்னொன்றை நோக்கி வாக்குகளைத் திரட்டுவதானது ஜனநாயகத்தில் சாதாரணமானது. இந்த அடிப்படையில்தான் ராஜபக்ஷக்கள்மீதான எதிர்ப்பை முன்வைத்துத் தமிழ் மக்களின் வாக்குகள் கையாளப்பட்டன. மூன்று தேர்தல்களிலும் ராஜபக்ஷக்களை எதிர்த்தல் என்னும் அடிப்படையில்தான் இன்னொரு தென்னிலங்கை வேட்பாளர் தமிழ் மக்களால் ஆதரிக்கப்பட்டார். ஆனால், அதனால் தமிழ் மக்கள் அடைந்த நன்மை என்ன?

இப்போது, நிலைமைகள் தெளிவாகத் தெரிகின்றன. தமிழ் மக்களுக்கு தேசிய இனப்பிரச்னை என்று ஒன்றில்லை என்பதே தேர்தல் களத்தில் பிரதான விடயமாக இருக்கின்றது. இருப்பது பொருளாதார பிரச்னை ஒன்று மட்டும்தான். அதனைத் தீர்ப்பதுதான் முதன்மையான ஒரேயொரு பிரச்னை. இப்போது தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இனப்பிரச்னை இருக்கின்றது - அதற்கு ஒரு தீர்வு தேவை என்பதைச் சொல்ல வேண்டியவர்கள் யார்? மற்றவர்கள் நமது பிரச்னையை புறந்தள்ளும்போது - இல்லாது செய்ய முயற்சிக்கும்போது - பாதிக்கப்பட்ட மக்கள்தானே தங்களுடைய பிரச்னையை முன்வைக்க வேண்டும் - அதற்காக உரத்துப் பேச வேண்டும். இந்த அடிப்படையில்தான் தமிழ்ப் பொது வேட்பாளர் எண்ணக்கரு உருவானது. இப்போது அது செயல் வடிவம் பெற்றிருக்கின்றது.


தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் பேசப்பட்ட காலத்திலிருந்து அதனை இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதனை ஆதரிக்கவில்லை. உதிரிகளாக சிலர் ஆதரித்து வருகின்றபோதும் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இதுவரையில் வெளியிடப்படவில்லை. இந்த நிலையில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் - மத்திய குழு உறுப்பினர் ஒருவரே பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கின்றார். இப்போது தமிழ் அரசுக் கட்சி என்ன செய்யப் போகின்றது? தமிழ்த் தேசிய நிலைப்பாடு ஒன்றை மேற்கொண்டதற்காக அவரை கட்சியிலிருந்து நீக்கப்போகின்றதா அல்லது தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புடன் இணைந்து கொள்ளப் போகின்றதா?

தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் வாக்குகளை திரட்டுவதானது ஒரு தமிழ்த் தேசிய பணியாகும். இலங்கை தமிழ் அரசுக் கட்சி இந்தப் பொறுப்பிலிருந்து விலகிநிற்க முடியுமா? தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பான எச்சரிக்கை உணர்வில் தவறில்லை. ஏனெனில், கட்சிகளின் பின்னால் சிதறிக்கிடக்கும் மக்கள் எவ்வாறு இந்த நிலைப்பாட்டின் பின்னால் அணிதிரள்வார்கள் என்பது கேள்விக்குறிதான். ஒன்றுக்காக முயற்சித்து தோல்வியடைவதில் பிரச்னையில்லை.


# நல்லூரான் திருவடி!

**அனந்த பாலகிட்ணர்**

இறையருள் சித்தர்கள், யோகிகள் போன்ற அனுபூதிமான்களூடாகவே மானிட வாழ்வியலில் பிரவாகமெடுக்கின்றது. யாழ்ப்பாணத்தில் சித்தர்கள், அனுபூதிமான்கள் வாழ்ந்து, மௌனமாக தமது ஆன்மீக சக்தியை வெளிப்படுத்தி, தம்மை பயபக்தியோடு நாடிவருவோருக்கு நல்வழி காட்டியிருந்தனர். அத்துடன், இறையருள் பூரித்திருக்கின்ற இடங்களிலெல்லாம் அவர்கள் நடமாடியிருந்தனர். அத்தகையவர் களில் முதன்மையானவர்களே செல்லப்பா சுவாமிகளும் அவரது சீடரான சிவயோக சுவாமிகளும் என்பது குறிப்பிடத்தக்கது.



இவ்விருவரும் நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடியில் இருக்கின்ற வில்வ மர நிழலில் அமர்ந்து இளைப்பாறி, இறையருளின் மகத்துவத்தை ஏனையோரும் உணரும்படி வாழ்ந்தனர். யோகசுவாமிகள் யாழ்ப்பாணம் கொழும்புத் துறையிலுள்ள தமது ஆச்சிரமத்திலும், நல்லூரில் தேரடி வில்வமர நிழலிலும் அமர்ந்திருந்து தமது ஆன்மீக அனுபவத்தை ஏனையோரும் உணரும்படி வாழ்ந்தார். நல்லூர் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சிவயோக சுவாமி களின் வாழ்க்கை மற்றும் அவரது அடியார்கள் பெற்ற அனுபவங்களை நல்லூர் உற்சவ நாட்களில் வழங்கு வதில் ‘ஈழநாடு’ மகிழ்ச்சி யடைகின்றது. ஏனெனில், ‘ஈழநாடு’ பத்திரிகையும்கூட யோகசுவாமிகளின் ஆசிகளு டனேயே ஆரம்பமானது.



சிவயோக சுவாமிகளின் அவதாரம்

இலங்கையின் வடபுலமான யாழ்ப்பாணத்தின் வடமுனையிலிருக்கின்ற வரலாற்று ரீதியாகவே ஆன்மீக முக்கியத்துவம் பெற்றதே மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம். இந்த ஆலயம் அமையப்பெற்ற மாவிட்டபுரத்தில் அம்பலவாணர் என்பவருக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் 1872ஆம் ஆண்டு மே

மாதம் 29ஆம் திகதி சிவயோகசுவாமிகள் அவதரித்தார். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் சதாசிவம். ஆன்மீக நாட்டத்தோடு துறவு மனப்பான்மையுடையவராக இவர் வாழத் தொடங்கினார்.

தமது சிறுபராய கல்வியை யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மிஷனரிமார்களினால் ஆரம்பிக்கப்பட்ட சென். பற்றிக்ஸ் கல்லூரியில் பயின்றார். அக்காலத்தில் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ பாடசாலைகளில் பயிலும் வேறு மதங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கும் ஒரு கிறிஸ்தவ பெயரை முன்வைத்தே அவர்களது பதிவேடுகளில் பதிவது வழக்கமாகும். எனவே, இவருக்கு அப் பாடசாலையில் வைக்கப்பட்ட பெயர் John என்பதாகும்.


பாடசாலை கல்வி முடிந்ததும் யோகர் சிறிது காலம் கிளிநொச்சியில் இரணைமடு குளத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக தொழில் புரிந்தார். மன திருப்தியோடு இத்தொழிலை அவர் மேற்கொண்டார். தமது அலுவலக கடமை யோடு பயனுள்ள மரங்களை நாட்டி பராமரித்தார். அவர் நாட்டி பராமரித்த மா மரமொன்று இன்றும் ‘சாமியார் மரம்’ என்ற பெயருடன் கிளிநொச்சியில் காணப்படுகின்றது.

தமது சக பணியாளர்களோடு அன் போடும் நற்புறவோடும் பழகினார். தமது மாதாந்த சம்பளத்தை அம் மாதத்துக்குரிய வாறே செலவழித்து விட்டு, மிஞ்சியதை திருப்பணிக ளுக்கும் உற்றார், உறவினர், ஏழை, எளிய மக்களுக்கும் வழங்கிவந்தார். பின்னாட்களில் துறவு மனப்பான்மை மேலிடவே, தமது மேலதிகாரியாகவிருந்த Browny என்ற ஆங்கிலேயரிடம் தமது விருப்பத்தை வெளி யிட்டு, ஆன்மீகப் பாதையில் செல்ல ஆரம் பித்தார்.

யோகர் கிளிநொச்சியில் பணிபுரிந்த காலத்திலேயே 1897ஆம் ஆண்டு, சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற கூட்டத்தில் சுவாமி விவேகாந்தர் உரையாற்றினார். அக்கூட்டத்தில் ஒரு பார்வையாளராக இளவயதில் யோகர் கலந்து கொண்டார். சுவாமி விவேகானந்தர் தாம் உரையாற்றிய மேடையில் கம்பீரமாக, சிங்கம் போல நடந்துதிரிந்து பேசினார் என்று பின்னாளில் தமது அடியவர்களிடம் யோகர் கூறியிருந்தார். “விடயம் பெரிது, நேரமோ சிறிது” என்று சுவாமி விவேகானந்தர் கூறியதை யோகர் அடிக்கடி நினைவு கூர்ந்து கொள்வாராம்.

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

ஓகஸ்ட் - 09 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 24
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர். நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகளையும் தா்ண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**
இதுவரை இருந்த சோர்வு களைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். மறதியால் பிரச்சினை வந்து நீங்கும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**துலாம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். சக ஊழியர் களால் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**விருட்சிகம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சூட்சுமங்களை உணர்வீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். மிக சிறப்பான நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர், வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
கடினமான காரியம் எளிதாக முடிப்பீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். மேலதிகாரிகள் மிகவும் கடுமையாக நடந்து கொள்வார்கள். ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

# கருணாநிதி உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீடு

சென்னை, ஓக. 09

மறைந்த முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா அரசு சார்பிலும், தி. மு. க. சார்பிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடப்பட்டு வருகிறது. நூற்றாண்டை முன்னிட்டு, பல்வேறு திட்டங்களையும் தமிழக அரசு அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, அவரது உருவம்



பொறிக்கப்பட்ட நாணயத்தை வெளியிட மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது. இதன்படி, கடந்த ஜூன் மாதம் 4ஆம் திகதி 100 ரூபாய் மதிப்பிலான நாணயம் வெளியிடப்பட்டது.

இந்த நாணயத்தை அதிகார பூர்வமாக எதிர்வரும் 17ஆம் திகதி சென்னை கலைவாணர் அரங்கில், தமிழக அரசு சார்பில் நடைபெறும் விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிடவுள்ளார். இந்த விழாவில் முதல்வர் மு. க. ஸ்டாலின், அமைச்சர்கள், தி. மு. க. நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர். (எ)



# முருகனுக்கு அரோகரா என்று முதல்வர் ஸ்டாலின் கூறுவார்!

### பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை

சென்னை, ஓக. 09

அடுத்த தேர்தலுக்கு முன்பாக ஜெய் சிறீ ராம், முருகனுக்கு அரோகரோ என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் சொல்வார் - இவ்வாறு பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

சென்னை தி.நகரில் உள்ள பா. ஜ. க. மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில், அண்ணாமலை முன்னிலையில், தென்னிந்திய மீனவர் பேரவை தலைவர், துணைத் தலைவர்கள் மற்றும் பேரவையின் நிர்வாகிகள் பலர் பா. ஜ. கவில் இணைந்தனர். இதன் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழக மீனவர்கள் பிரச்னை தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை, மீனவ சங்கப் பிரதிநிதிகளுடன் சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம்.

தமிழக அமைச்சர் ஒருவர் தற்போதைய சமூக நீதி ஆட்சி இராமர் காலம் போல் இருப்பதாக கூறுகிறார். தி. மு. க. சொல்லும் கடவுள் மறுப்பு கொள்கை இனி வேலைக்கு ஆகாது என நினைத்துவிட்டார்கள். பா. ஜ. க. நடவடிக்கை காரணமாக தி. மு. கவுக்கு பயம் ஏற்பட்டுள்ளது. எனவே, 2026 ஆம் ஆண்டு சட்டப் பேரவை தேர்தலுக்கு முன்பாக முதல்வர் மு. க. ஸ்டாலின் 'ஜெய் சிறீ ராம், முருகனுக்கு அரோகரா' என்று கூட சொல்வார்- என்றார். (எ)

# "இந்துக் கோவில்கள்மீதான தாக்குதலை வேடிக்கை பார்க்கும் இந்தியா கூட்டணி"

கோவை, ஓக. 09

பலஸ்தீன முஸ்லிம்களுக்காக போராடிய "இந்தியா" கூட்டணி கட்சிகள், பங்களாதேஷில் இந்துக்கள் தாக்கப்படுவதை வேடிக்கை பார்க்கின்றனர் என்று பா. ஜ. க. தேசிய மகளிர் அணித் தலைவி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததுடன் நாட்டைவிட்டே ஷேக் ஹசீனா வெளியேறியிருக்கிறார். ஆனாலும், அங்கு கலவரங்கள் ஓயவில்லை. இப்போது அங்கு வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான இந்துக்களை குறிவைத்து வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்துக் கோவில்கள், இந்துக்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. பல்வேறு கோவில்கள் எரிக்கப்பட்டுள்ளன. இஸ்கான் கோவில் தாக்கப்பட்டு, அங்குள்ள "பகவத் கீதை" உள்ளிட்ட புனித நூல்கள் எரிக்கப்பட்ட காட்சி கண்ணீரை வரவழைக்கிறது. பங்களாதேஷ் நாட்டில் சிறுபான்மையினராக உள்ள இந்துக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருக்கிறது.

இஸ்ரேல் - பலஸ்தீனம் போர் காரணமாக, பலஸ்தீனத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றதும், இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள் குறிப்பாக, தி. மு. க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் கண்டனக் குரல் எழுப்பின.

ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று இன்று வரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பங்களாதேஷ் மண்ணின் மைந்தர்களான இந்துக்கள் தாக்கப்படுவது குறித்தும், அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்படுவது குறித்தும், காங்கிரஸ், தி. மு. க. உள்ளிட்ட கட்சிகள் மௌனம் சாதிக்கின்றன- என்றார். (எ)

# புதுச்சேரி அரசை கண்டித்து தி. மு. க., காங். வெளிநடப்பு



புதுச்சேரி, ஓக. 09

புதுச்சேரியில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 50 சதவீத இடங்களை அரசு பெறாததை கண்டித்து தி. மு. க., காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். தொடர்ந்து ரங்கசாமி ஆதரவு சுயேட்சை எம். எல். ஏ. நேரு, பா. ஜ. க. ஆதரவு சுயேட்சை எம். எல். ஏ. அங்காளன் ஆகியோரும் வெளிநடப்பு செய்தனர். (எ)

# அமைச்சர்கள் விடுதலை உத்தரவு ரத்து

சென்னை, ஓக. 09

சொத்துக் குவிப்பு வழக்குகளில் இருந்து தமிழக அமைச்சர்களான தங்கம் தென்னரசு, சாத்தூர் இராமச்சந்திரன் ஆகியோரை விடுவித்து சிறீ வில்லிபுத்தூர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது. இதேவேளை, இவர்கள் மீதான வழக்கை மீண்டும் முதலில் இருந்து தினந்தோறும் என்ற அடிப்படையில் விசாரிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம் வலுப்பெற்றதாக அரசாங்கம் போலியான கோஷம்

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக. 09

**பொருளாதாரம் வலுவடைந்துள்ளதாக அரசாங்கம் போலியான கோஷங்களை எழுப்பி வருவதாகத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பாராளுமன்றில் உரையாற்றிய அவர், நாட்டில் வசிக்க முடியாது என்ற காரணத்தினால் கடந்த 2 ஆண்டுகளில் 6 இலட்சத்துக்கும் அதிகமானோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முந்தைய காலங்களில் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்களையும் சேர்த்து தற்போது மொத்தமாக 40 இலட்சம் பேர் வெளிநாடுகளில் உள்ளனர்.

அவர்கள் 2022ஆம் ஆண்டில் 3.7 பில்லியன் அமெரிக்க டொலரையும், 2023ஆம் ஆண்டில் 5.9 பில்லியன் டொலரையும் இலங்கைக்கு அனுப்பியுள்ளனர்.

இவ்வாறாக நாட்டில் வசிப்பதற்குப் பொருத்தமற்ற சூழலை உருவாக்கி, இலங்கையர்களை நாட்டிலிருந்து வெளியேற்றிய ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் அதனூடாக அந்நிய செலாவணியை பெருக்கியது.

பொருளாதாரத்தை வலுப்படுத்த ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த எந்த முயற்சியினாலும் இந்தநிலை ஏற்படவில்லை.

பொருளாதாரம் வலுவடைந்திருப்பதாகக் கூறும் அரசாங்கம் எதற்காக இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்கிறது.

பொருட்களின் விலை ஏன் பழைய நிலைக்குத் திரும்பவில்லை.

அரசாங்கம் பொய்களைக் கூறி ஒருபோதும் மக்களை ஏமாற்ற முடியாது.

மக்கள் தங்களது மன அழுத்தங்களை வெளிப்படுத்துவதற்கு எதிர்வரும் தேர்தலுக்காகக் காத்திருக்கின்றனர்-என்றார். (அ)


# செம்மணி நல்லூரான் வரவேற்பு வளைவில் பறந்தது சேவல் கொடி!

யாழ்ப்பாணம், ஒக. 09

செம்மணியில் அமைந்துள்ள நல்லூரான் வரவேற்பு அலங்கார வளைவில் சேவல் கொடி கட்டும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

அலங்காரக் கந்தன் என்று போற்றப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதையொட்டி, வரவேற்பு வளைவில் சேவல் கொடி கட்டும் சம்பிரதாய நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மதியம் நடைபெற்றது.

படம் : ஐ.சிவசாந்தன்



ஏ- 9 வீதியில் இருந்து செம்மணி வீதி ஆரம்பிக்கும் இடத்தில் குறித்த வரவேற்பு வளைவு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம்!

கொழும்பு, ஒக. 09

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நேற்றுவரை (புதன்கிழமை) 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 11 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 1 வேட்பாளரும், சுயேட்சையாக போட்டியிட 10 வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தல் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ள நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11.30 மணி வரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் காலவகாசம் இன்று வெள்ளிக்கிழமை முடிவடையவுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஓசல ஹேரத்தும், இலங்கை தொழிலாளர் கட்சி சார்பில் ஏ.எஸ்.பி.லியகேவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாசவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ்.கே. பண்டாரநாயக்கவும், தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும், புதிய சீஹல உருமய கட்சி சார்பில் சரத் மனமேந்திரவும், ஜனசேனா முன்னணி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரரும், அருனலு மக்கள் முன்னணியின் சார்பில் கே.ஆர்.கிறிஷானும்,தேசிய மக்கள் சக்தி சார்பில் அனுரகுமார திஸாநாயக்கவும்,சோசலிச சமத்துவ கட்சி சார்பில் பானி விஜேசிறிவர்தன ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் றுஹூணு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்சா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

மேலும் சுயேச்சையாக போட் டியிடும் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன,கே.கே.பியதாஸ, ஆனந்த குலரத்ன,அக்மீமன தயாரத்ன தேரர் ,சிறிபால அமரசிங்க,சரத் பொன்சேகா,அன்டனி விக்டர் பெரேரா,ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ்,மானகே பேமசிறி ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். (அ)

# நாட்டில் புதிய தனியார் நிறுவன பதிவு எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 09

2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், நாட்டில் புதிய தனியார் நிறுவனங்களது பதிவுகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

நிறுவன பதிவாளர் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ புள்ளிவிவர அறிக்கையில் இந்த தரவு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த ஆண்டின் முதல் 6 மாத காலப்பகுதியில் 12 ஆயிரத்து 651 புதிய வணிக நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10 ஆயிரத்து 520 புதிய நிறுவனங்களின் பதிவு இடம்பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் மாத்திரம் 1899 புதிய நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொருளாதாரம் தொடர்ந்து மீண்டு வருவதால் தொழில்முனைவோர் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டு வருவதாக அந்தத் தரவின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பொலிஸ் அலுவலரின் துப்பாக்கி இயங்கியதில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக. 09

சீதுவை - கொட்டுகொட பிரதேசத்தில் நேற்று அதிகாலை பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கி இயங்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சீதுவயிலிருந்து கொட்டுகொட நோக்கி பயணித்த காரை கொட்டுகொட பொலிஸ் சோதனைச்சாவடிக்கருகில் சோதனைக்குட்படுத்திய சந்தர்ப்பத்தில், காரிலிருந்த நபர்கள் பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியை பறிக்க முற்பட்டபோதே துப்பாக்கி இயங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த நபரொருவர் காயமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து உயிரிழந்துள்ளார்.

பூகொடையை சேர்ந்த 38 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இதன்போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

காரில் பயணித்த ஏனைய மூவரும் தப்பிச்சென்றுள்ளதுடன், அவர்களைத் தேடும் முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தென்கொரியாவில் இலங்கையருக்கு கிடைத்துள்ள புதிய வேலை வாய்ப்பு!

கொழும்பு, ஒக. 09

இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரை, மொத்தம் 3,694 இலங்கையர்கள் தென் கொரியாவில் வேலைக்காக சென்றுள்ளதுடன் மேலும் 100 நபர்கள் விரைவில் புறப்பட உள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தென் கொரிய மனித வள அபிவிருத்தி சேவை நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வேலை வாய்ப்புகளின் ஒரு பகுதியாகும் என பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2004 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து, இலங்கையர்கள் தென் கொரியாவில் பணியாற்றுவதற்காக வெளியேறி வருகின்றனர்,

தற்போது தென் கொரியாவில் பதவிகளுக்கு புதிய வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு வருகின்றதுடன் மேலும் பல தொழிலாளர்கள் இந்த வேலைகளுக்கு எதிர்காலத்தில் வெளியேற திட்டமிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 2 அமைச்சுச் செயலர்களுக்கு இறுதி அறிவித்தல் பிறப்பிப்பு

கொழும்பு, ஒக. 09

அரச சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் 2 அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு எதிராக இறுதி அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பிலான விடயங்களை ஆராய்வதற்காக குறித்த இருவரும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பாளர்கள் முதல்தடவையாக நேற்று முன் தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டபோதே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

அத்துடன், தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான புதிய அளவுகோல் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசக் கடன்களை மறுசீரமைக்கும் காலத்தை உறுதியாக குறிப்பிடவில்லை

## நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 09

**சர்வதேச கடன்களை மறுசீரமைக்கும் காலப்பகுதியை உறுதியாக குறிப்பிடவில்லை. வெகுவிரைவில் மறுசீரமைப்பு பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். சர்வதேச நிறுவனங்களிடமிருந்து நிதி மற்றும் நீதி தொடர்பான ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கடன் மறுசீரமைப்பு என்பது இலகுவானதொரு விடயமானதல்ல. பரந்துபட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கை பல்வேறு சந்தர்ப்பங்களில் பல வழிமுறைகளில் சர்வதேச மட்டத்தில் கடன்களை பெற்றுக்கொண்டுள்ளது.

தேசிய கடன்கள் சிறந்த முறையில் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்கும் போது நிதி தொடர்பான ஆலோசனைகள் பிரான்ஸ் நாட்டின் லஸாட் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இருதரப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு பணிகள் சிறந்த முறையில் நிறைவடைந்ததன் பின்னர் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒப்பந்தங்களை பாராளுமன்றத்துக்கு முழுமையாக சமர்ப்பிப்பார். கடந்த காலங்களிலும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் விபரங்களை முழுமையாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளோம்.

நீதி தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு கிளிபர்ட் சான்ஸ் நிறுவனத்திடம் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்புக்கு பின்னர் இந்த ஒப்பந்தம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு இறுதிப்படுத்தப்படும் திகதியை மத்திய வங்கியோ அல்லது அரசாங்கமோ உறுதியாக குறிப்பிடவில்லை. மறுசீரமைப்பு பணிகளை வெகுவிரைவில் நிறைவு செய்து, பொருளாதார மீட்சிக்கான அடுத்தகட்ட பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (அ)

# நல்லூர் கந்தன் ஆலயத்தின் சுற்று வீதிகளில் வீதித்தடை

யாழ்ப்பாணம், ஓக. 09

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ பெருவிழாவை முன்னிட்டு நேற்றுக் காலையிலிருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் வீதித்தடை செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில், நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ பெருவிழாவை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்படும் குறித்த வீதித்தடையானது எதிர்வரும் செப்ரெம்பர் 4 ஆம் திகதி மாலை வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்துவிடப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாண மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியில் பயணித்து யாழ் நகரை அடைய முடியும்.

அத்துடன் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியினூடாக பயணிக்க முடியும் என யாழ் மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (அ)

# மன்னார் மனிதப் புதைகுழிகளில் ஸ்கானர் சோதனைக்கு தீர்மானம்

மன்னார், ஓக. 09

மன்னார் சதொச வளாக மனித புதைகுழி பகுதியில் ஸ்கேனர் இயந்திரங்களைக் கொண்டு பரிசோதனை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மனித புதைகுழி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையில் இந்த பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் ஏலவே அங்கு மீட்கப்பட்ட மனித எச்சங்களைக் கொண்டு உயிரிழந்தவர்களின் வயது உள்ளிட்ட விவரங்களை ஆராயுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (அ)

# வடமராட்சியில் அனுமதியின்றி கட்டப்பட்ட மதில்கள் உடைப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 09

வடமராட்சி பகுதியில் பிரதேச சபையின் அனுமதியின்றி முறைகேடாகக் கட்டப்பட்டு வந்த மதில்கள் நேற்று முன்தினம் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் பிரசன்னத்துடன் ஜே.சி.பி இயந்திரம் மூலம் இடித்து அகற் றப்பட்டது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை (கரவெட்டி பிரதேச சபை) எல்லைக்கு உட்பட்ட நெல்லியடி நகரம், கரணவாய் வடக்கு ஆகிய பிரதேசங்களில் இருவேறு காணி உரிமையாளர்களால் பிரதேச சபையின் உரிய அனுமதியின்றி தொடர்ந்தும் கட்டப்பட்டு வந்த மதில்களே இடித்து அகற்றப்பட்டுள்ளன.

கரணவாய் வடக்கு நவிண்டில் பிரதேசத்தில் உள்ள மதிலொன்றும் நெல்லியடி நகர பஸ் தரிப்பிடத்தின் பின்னால் உள்ள வீடொன்றின் மதிலுமே இவ்வாறு இடித்து அகற்றப்பட்டது.

சமீப காலமாக அனுமதி பெறாமல் கட்டடங்கள், மதில்கள் கட்டப்பட்டு வருகின்றமை அதிகரித்து வருவதாகவும், இதனால் இவற்றைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் பிரதேச சபையிடம் முறையிட்டு வந்தனர்.

இது தொடர்பில் பிரதேச சபையினரால் கடந்த ஒரு வருடமாக சம்பந்தபட்டவர்களுக்கு நேரடியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு பல்வேறு கடிதங்களும் வழங்கப்பட்டு வந்த நிலையிலும் அவற்றை மீறித் தொடர்ந்து முறைகேடான விதத்திலும் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் பொது வீதிகளை ஆக்கிரமிக்கும் வண்ணமும் குறித்த மதில்கள் கட்டப்பட்ட காரணத்தினால் இவை இடித்து அகற்றப்பட்டதாக பிரதேச சபைத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)



# ஜனாதிபதிக்கு நாட்டு மக்கள் நன்றி சொல்ல கடமையுண்டு!

## கூறுகின்றார் நளின் பெர்னாண்டோ



கொழும்பு, ஓக. 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளனர் என வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் நளின் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான தேர்தல் நடைபெறவுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மக்கள் தேர்தலைப் பற்றி சிந்திக்கவில்லை. தங்கள் எதிர்காலத்தைப் பற்றி கூட சிந்திக்கவில்லை.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்று இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தினார். அதற்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்-என்றார்.

# ஒருவரை கடித்துக் குதறிய அமெரிக்க நாய்களின் உரிமையாளருக்கு மறியல்!

கொழும்பு, ஓக. 09

வீதியில் பழங்கள் விற்பனை செய்த ஒருவரை பலத்த காயங்களை ஏற்படுத்திய நான்கு அமெரிக்க புல்லி நாய்களின் உரிமையாளரை ஒகஸ்ட் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி உத்தரவிட்டார்.

களனியைச் சேர்ந்த எஸ்.ஏ. ஜயந்த என்ற விற்பனையாளர் களனி கெமுனு மாவத்தைக்கு அருகில் பழங்கள் மற்றும் காய்கறிகளை விற்பனை செய்துகொண்டிருந்தபோது நாய்களால் தாக்கப்பட்டார்.

இந்த நாய்களின் உரிமையாளர் ஹெட்டியாராச்சிகே சந்தன களனி, பியகம பகுதியைச் சேர்ந்தவர்.

பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது வாடிக்கையாளர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், தேவையான தடுப்பூசிகளை வழங்குமாறும் கோரியிருந்தார்.

விற்பனையாளரின் உடல் நிலை காரணமாக தற்போது வாக்குமூலத்தை வழங்க முடியாது எனவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, பாதிக்கப்பட்ட தரப்பினரின் அனைத்து மருத்துவச் செலவுகளையும் ஈடு செய்வதாக உறுதியளித்தார். எவ்வாறாயினும், வழக்கு விசாரணையை ஒகஸ்ட் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (அ)

# அரசாங்க வைத்தியசாலைகளில் 52 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 09

அரசாங்க வைத்தியசாலைகளில் 52 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சர் ரேம்ஷ் பத்திரன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் மருத்துவ திருத்தச் சட்டமூலம் பின்னர் இரண்டாம் வாசிப்பு விவாதத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை அனைத்து உயிர்காக்கும் மருந்துகளும் வைத்தியசாலைகளில் உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் தேசிய நிலையமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார்.

மேலும் சுகாதாரத்துறை தொடர்பான ஒன்பது சட்ட மூலங்கள் எதிர்காலத்தில் முன்வைக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஆணைக்குழுவினரின் அறிவிப்பையும் மீறி சுற்றறிக்கை!

## சட்டத்துக்கு முரணானது என சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 09

**தேர்தல் காலத்தில் ஓய்வூதியர்களுக்கு 3000 ரூபா கொடுப்பனவை வழங்குவதை தற்காலிகமாக நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளபோதிலும் குறித்த கொடுப்பனவை வழங்குவது தொடர்பில் அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பான சுற்றறிக்கைகள் அமைச்சின் செயலாளர்களினால் மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, செப்டம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உரிய கொடுப்பனவு வழங்கப்படும் என குறித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை அரசாங்க ஓய்வூதியர்களுக்கு 3000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தது.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற அமைச்சுக்களின் செயலாளர்கள் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த உத்தரவை மீறி உரிய கொடுப்பனவை வழங்குமாறு சுற்றறிக்கையை வெளியிடுவது தேர்தல் சட்டத்திற்கு எதிரானது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# பாடசாலைகளின் காவலாளிகள் பதவிக்கு விரைவில் ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஒக. 09

பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தற்போது வெற்றிடமாகவுள்ள பாடசாலை காவலாளிகள் பதவிக்கு விரைவில் ஆட்சேர்ப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் பாடசாலைகளின் கல்வி சாரா ஊழியர்கள் தரத்தில் இந்த காவலாளிகள் நியமனங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் நிலவும் கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் காவலாளிகளுக்கான தட்டுப்பாடு தொடர்பில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்



டலஸ் அழகப் பெரும சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

பாடசாலை கல்வி சாரா ஊழியர்களை உதவியாளர் சேவையாக பெயரிட்டுள்ளதுடன் பாடசாலைக் கல்வி சாரா ஊழியர்களுக்கான தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

# அராலி ஆலடிச் சந்தி அருகே இளைஞர்கள்மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக. 09

அராலி ஆலடி சந்திக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றின் முன்னால் நின்ற இளைஞர்கள் மீது நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த குழு ஒன்று தாக்குதல் நடாத்தியுள்ளது.

குறித்த குழுவுக்கும் அவ்விடத்தில் நின்ற இளைஞர்களுக்கும் ஏற்கனவே உள்ள முரண்பாடு காரணமாக இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகிறது.

தாக்குதல்களுக்கு உள்ளாகியவர்களில் ஒருவர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (அ)

# கிராம உத்தியோகத்தர் சங்கம் மீண்டும் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஒக. 09

அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் இரண்டு நாட்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் கிராம உத்தியோகத்தர்கள் தங்களது அனைத்து சேவைகளிலிருந்தும் விலகியிருப்பார்கள் என அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜகத் சந்திரலால் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த பணிப்புறக்கணிப்பு, தேர்தல் பணிகளை எந்தவகையிலும் பாதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிராம உத்தியோகத்தர் சேவை யாப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# நாணய நிதியத்தின் உடன்படிக்கை ரத்து செய்தால் பட்ஜெட்கூட இல்லை

## பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 09


சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினாலேயே நாடு தலை தூக்கி இருக்கிறது. இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை இரத்து செய்தால் 2025 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தைக் கூட முன்வைக்க முடியாதுபோகும் என போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள கடன் உடன்படிக்கை காரணமாக நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடிந்துள்ளது. அதன் பிரதிபலனாக இன்று நாட்டுக்கு தேவையான எரிபொருள், உரம் மருந்து உணவு ஆகியவை கையிருப்பில் உள்ளன.

ஹர்ஷ டி சில்வா எம்.பி. கூறுவது போல் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை ரத்து செய்தால் அடுத்த வருடம் வரவு செலவு திட்டத்தைக் கூட முன் வைக்க முடியாது. அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் உட்பட நலன்புரி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுவிடும். அது மட்டுமன்றி அந்த உடன்படிக்கையை ரத்து செய்ய நினைக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கு அந்த அரசாங்கத்தை இரண்டு வாரங்களுக்கு கூட முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போகும்.



எனவே சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாட்டில் சிறிதளவு மாற்றங்களை ஏற்படுத்தினாலும் நாட்டை முன்னெடுத்து செல்ல முடியாத நிலையே உருவாகும் அதனால் நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதை தவிர்ந்துகொள்ளுமாறு நாட்டு மக்களை கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (அ)

# ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குபவர்கள் அவரை அதலபாதாளத்துக்கு தள்ளுவர்!

## சுட்டிக்காட்டுகிறார் துஷார இந்துனில்

கொழும்பு, ஒக. 09

***1994 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களில் அமைச்சு பதவி வகித்தவர்கள் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்றுள்ளார்கள். இவர்களுடன் ஜனாதிபதி எந்த இலக்கை நோக்கி பயணிக்க போகிறார் என்பதை அறியவில்லை. ஜனாதிபதியை அதலபாதாளத்துக்கு தள்ளி விட்டு தமக்கு சாதகமாக உள்ள பக்கம் தாவுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.***

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற "அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை" தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து மதுபானச்சாலை அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொண்ட எதிரணியின் பெயர் விபரத்தை ஐந்து நிமிடங்களுக்குள் வெளியிடுவதாக மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார். ஒரு மணித்தியாலம் கடந்தும் அவர் பெயர்ப் பட்டியலை வெளியிடவில்லை. சபையிலும் அவரை காணவில்லை. பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு பொய்யுரைத்து சேறு பூசுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன திறந்த பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்தினார். பொருளாதார முன்னேற்றத்துக்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போது பிரபாகரன் வடக்கில் தீ வைத்தது, மக்கள் விடுதலை முன்னணி தெற்கில் தீ வைத்தது. இதனால் பொருளாதார வளர்ச்சி பின்னடைந்தது.

***1985 ஆம் ஆண்டு ஏற்றுமதி பொருளாதாரம் 32 சதவீதமாகவும், ஆசியாவின் மனித வள சுட்டெண்ணில் இலங்கை முன்னிலையில் இருந்தது.*** தென்கொரியா, தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளுக்கு இணைவாகவே இலங்கையின் பொருளாதார நிலைவரங்கள் காணப்பட்டன. இதன் பின்னர் கோத்திரவாத கொள்கையுடைய தரப்பினர் ஆட்சியமைத்ததால் பொருளாதார முன்னேற்றம் ஸ்தம்பித மடைந்தன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊழல் மிக்க அரச நிர்வாகத்




தால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி நிலைக்கு சென்றது. கோட்டபய பொருளாதார வீழ்ச்சியை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார்.

***1994 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களில் அமைச்சு பதவி வகித்தவர்கள் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்றுள்ளார்கள். இவர்களுடன் ஜனாதிபதி எந்த இலக்கை நோக்கி பயணிக்க போகிறார் என்பதை அறியவில்லை. ஜனாதிபதியை அதளபாதாளத்துக்கு தள்ளி விட்டு தமக்கு சாதகமாக உள்ள பக்கம் தாவுவார்கள்-என்றார்.*** (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி கால்நடைகளால் போக்குவரத்துக்கு இடையூறு!



கல்முனை, ஓக. 09

**அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் திரியும் கட்டாக்காலி கால்நடைகளால் பல்வேறு சிரமங்களை பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.**

கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் சுற்றித்திரியும் இவ்வாறான கட்டாக்காலி மாடுகளால் அடிக்கடி விபத்துக்கள் மற்றும் பொதுமக்களின் நாளாந்த செயல்பாடுகளுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டு வருகின்றது.

பிரதேச செயலங்கள், மருத்துவமனைகள், வங்கிகள் பொதுப் போக்குவரத்து பகுதிகளில் இரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் திரிகின்றன. வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் குறைந்துள்ளமையால் கட்டாக்காலி மாடுகள், ஆடுகள் பிரதான வீதிகளை ஆக்கிரமித்து சுதந்திரமாக திரிகின்றன.

எனவே, கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்திருப்பதால் அவற்றை பிடித்து உரிமையாளர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இந்தப் பகுதியில் மழை பெய்து வரும் நிலையில் பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகள், ஆடுகளின் எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வருகின்றது. இதனால் வீதியில் பயணம் செய்யும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி வருகின்றன.

இந்தக் கட்டாக்காலி விலங்குகள், பிரதான வீதிகள் மற்றும் பொதுச் சந்தைகள், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பெரும் தொல்லையாக இருப்பதுடன் விபத்துகளும் நிகழ்கின்றன.

அத்துடன் இரவு நேரங்களில் பெரும் எண்ணிக்கையிலான கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக நகரை ஆக்கிரமித்து அசுத்தப்படுத்தி வருவதும் துர்நாற்றம் வீசுவதும் வர்த்தகர்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

எனவே, கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் பொலிஸாருடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ)






## பெண் ஆளுமைகளுக்கு விருது

சைத்தூன் நஹார் பௌண்டேசன் ஏற்பாடு செய்த பெண் ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் முன்னாள் வர்த்தக, முகாமைத்துவ பீடாதிபதி சபீனா இம்தியாஸ் கலந்து கொண்டார்.

இதில் பெண் ஆளுமைகளுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டதோடு, தலைமைத்துவ பயிற்சியை முடித்துக் கொண்ட பெண்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



## பாடசாலை தோட்டம் வெற்றி

சம்மாந்துறை, ஓக. 09

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை தோட்டம் வெற்றியளித்துள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ஏ. எம். முனாஸிரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் மாணவர்களது மனப்பாங்கு விருத்தியின் ஆற்றல்கள் மற்றும் இணைப்பாட விதான செயல்பாடுகள் தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியளித்து அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகள் பாடசாலை அதிபரிடம் வழங்கப்பட்டன.

(எ)

## கிழக்கின் சுற்றுலா மையம் பயிற்சித் திட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஓக. 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிந்தனையில் கிழக்கிலங்கையில் வசிக்கின்ற சுற்றுலாத்துறையில் ஆர்வமிக்க இளைஞர் - யுவதிகளுக்கு "கிழக்கின் சுற்றுலா மையம்" பயிற்சித் திட்டமானது மட்டக்களப்பில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் செயல் குழு தலைவரும் "கிழக்கின் சுற்றுலா மையம்" என்ற இந்த கருப்பொருளை ஜனாதிபதி மட்டத்துக்கு எடுத்துச்சென்ற வருமான சமூக ஆர்வலர் மோகன் கணபதிப்பிள்ளை பங்குபற்றியிருந்தார்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 150இற்கு மேற்பட்ட இளைஞர் - யுவதிகள் பங்குபற்றி இருந்ததுடன் அவர்களுக்கான விரிவுரைகள், அனுபவமும் தேர்ச்சியும் மிக்க விரிவுரையாளர்களை கொண்டு நடத்தப்பட்டது.



கிழக்கின் சுற்றுலா மையம் செயல்திட்டமானது இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது கிழக்கிலங்கையின் சுற்றுலா துறை முன்னேற்றம் மற்றும் அந்நியச் செலாவணியை அதிகரிக்க வழிவகுப்பதோடு அவர்களின் தொழில் மற்றும் வருமானத்தை அதிகரிக்க செய்வதையும் தொழில் அங்கத்துவத்தை வழங்குவதையும் பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படுவதுடன் கிழக்கின் சுற்றுலா மையத்தால் சுற்றுலா வழிகாட்டிக்கான உத்தியோகபூர்வ அடையாள அட்டையும் வழங்கப்படவுள்ளது.

(எ)

## வீதி விபத்துகளை குறைக்க கிழக்கில் விசேட செயலமர்வு

மட்டக்களப்பு, ஓக. 09

கிழக்கு மாகாணத்தில் வீதி விபத்துகளை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் காயம் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகின் கிழக்கு மாகாணத்துக்கான மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாகாண மருத்துவமனைகள் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, அம்பாறை பிராந்தியங்களின் சுகாதார பணிப்பாளர் பணிமனை அதிகாரிகள் பங்குபற்றினர்.

இந்த செயலமர்வில் உரையாற்றிய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன்,

வீதி விபத்துக்கள் மற்றும் காயங்கள் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பொது மக்களுக்கான விழிப்புணர்வு செயல்பாடுகளை விரிவுபடுத்தல் போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம் வீதி விபத்துக்களை குறைப்பதுடன், சுகாதார சேவைகளுக்கான நிதி மற்றும் வேலைப் பழுவை கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

(எ)

# கல்முனை ஸாஹிரா கரப்பந்தாட்ட அணி தேசிய மட்டத்துக்குத் தெரிவு

கல்முனை, ஓக. 09

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி கரப்பந்தாட்ட அணி தேசிய மட்ட போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு வெபர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட போட்டியிலேயே கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அணியினர் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 பொலிஸ் நிலையங்கள் பங்களாதேஷில் நிர்மூலம்!

## 50 பொலிஸார் உட்பட 300 உயிரிழப்பு
## இராணுவ ஜெனரல் பதவி நீக்கம், கைது

டாக்கா, ஓக. 09

**பங்களாதேஷில் 400 பொலிஸ் நிலையங்களை அடித்து நொறுக்கி நிர்மூலமாக்கிய போராட்டக்காரர்கள் அங்கிருந்த துப்பாக்கிகள் உள்ளிட்ட பொருட்களை சூறையாடினர். அத்தோடு, 50 பொலிஸார் உட்பட 300 பேர் கொல்லப்பட்டனர். இதேவேளை, இராணுவ ஜெனரல் பதவி நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார். அவர் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**



பங்களாதேஷில் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் அரசு ஆட்சி செய்து வந்த நிலையில், அரசு வேலைகளில் 30 சதவீத இடஒதுக்கீடு விவகாரம் வன்முறையாக வெடித்தது. அரசை எதிர்த்து மாணவர்கள் உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், கடந்த ஜூலை மாதம் மட்டும் 300 பேர் பலியாகினர். இந்த நிலையில், இம்மாதம் 5ஆம் திகதி போராட்டம் தீவிரமடைந்ததில், ஹசீனா பதவி விலக கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷமிட்டனர். இதில், நூற்றுக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இந்த வன்முறையை தொடர்ந்து, பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகினார்.

இதன்பின்பும், அந்த நாட்டில் நடந்த வன்முறையில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்தச் சூழலில், கடந்த 2 நாட்களில் 400 பொலிஸ் நிலையங்களை போராட்டக்காரர்கள் சூறையாடினர். 50 பொலிஸார் உயிரிழந்தனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், ஹசீனா நாட்டை விட்டு வெளியேறிய பின்னர், பங்களாதேஷ் இராணுவத்தின் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் மாற்றப்பட்டனர். இதில், மேஜர் ஜெனரல் ஜியாவுல்லும் அடங்குவார். அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

அவர் இரவோடு இரவாக நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயன்றார். இதற்காக, டாக்கா விமான நிலையத்துக்கு நேற்றிரவு சென்ற அவர், எமிரேட்ஸ் 585 என்ற விமானத்தில் புறப்பட தயாரானார்.

ஆனால், விமான ஓடுபாதையில் சென்ற விமானம் மீண்டும் விமான நிலையத்துக்கு திருப்பிக் கொண்டு வரப்பட்டது. நள்ளிரவில் அவர் கைது செய்யப்பட்டார். (எ)

# "பங்களாதேஷை கட்டியெழுப்ப அன்பும் அமைதியுமே தேவை"

டாக்கா, ஓக. 09



"பங்களாதேஷை மீண்டும் கட்டியெழுப்ப அன்பும் அமைதியுமே தேவை" என்று வீட்டுக் காவலிலிருந்து விடுதலையான பங்களாதேஷ் தேசிய கட்சி தலைவர் கலிதா ஜியா தெரிவித்தார்.

நயாபால்டனில் நடந்த பங்களாதேஷ் தேசிய கட்சியின் பேரணியில் காணொலி வாயிலாக முன்னாள் பிரதமர் கலிதா ஜியா உரையாற்றினார். 2018ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர் ஆற்றிய முதல் பொது உரை இது. இந்த உரையில் அவர், "நான் இப்போது விடுவிக்கப்பட்டேன். சாத்தியமற்றதை சாத்தியமாக்குவதற்காக செய் அல்லது செத்துமடி எனும் போராட்டத்தில் ஈடுபட்ட துணிச்சலான மக்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். எனது விடுதலைக்காக போராடிய, பிரார்த்தனை செய்த மக்களுக்கு நன்றி"- என்றார். (எ)

# ட்ரம்ப் உட்பட பலரை கொலை செய்ய திட்டம்

வாஷிங்டன், ஓக. 09




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட பலரை கொலை செய்ய திட்டமிட்ட குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தானை சேர்ந்த நபர் ஒருவரை அமெரிக்க அதிகாரிகள் கைது செய்தனர்.

அமெரிக்க அரசியல்வாதிகளை கொலை செய்ய திட்டமிட்டார் என ஈரானுடன் தொடர்புகளை பேணிய பாகிஸ்தானை சேர்ந்த நபருக்கு எதிராக அமெரிக்க அதிகாரிகள் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் முக்கிய அதிகாரிகளை கொலை செய்வதற்காக நபர் ஒருவரை அமர்த்துவதற்கு 46 வயது அசிவ் மேர்ச்சன்ட் முயன்றார் என அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பொது அதிகாரி, அல்லது அமெரிக்க பிரஜையை கொல்வதற்கான வெளிநாட்டு சதி எங்களின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயம் என எவ். பி. ஐ. யின் இயக்குநர் தெரிவித்தார். (எ)



# பங்களாதேஷில் கோவில் மீதான தாக்குதலை தடுத்த இந்துக்கள்

கொல்கத்தா, ஓக. 09

பங்களாதேஷில் இந்துக் கோவில்கள், இந்துக்களின் வீடுகள், கடைகள் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இது குறித்து இந்தியாவின் கொல்கத்தாவில் உள்ள இஸ்கான் கோவில் துணைத் தலைவர் இராதாராமன் தாஸ் கூறுகையில், "பங்களாதேஷில் உள்ள ஒரு கோவில் மீது செவ்வாய்க்கிழமை போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர். இதில் கோவிலும் அங்கு இருந்த சிலைகளும் முற்றிலும் சேதமடைந்தன. மேலும் கோவிலில் இருந்த விலை உயர்ந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.


இதேபோன்று மற்றொரு கோவில் மீது தாக்குதல் நடத்த ஒரு கும்பல் முயற்சி செய்தது. ஆனால், அந்தக் கோவில் பகுதியில் திரண்டிருந்த ஏராளமான இந்துக்கள் அவர்களை விரட்டியடித்தனர். இதனால் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது"- என்றார்.

உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறும்போது, "இந்தியாவுக்கு பக்கத்தில் உள்ள நாடுகள் அனைத்தும் பற்றி எரிகின்றன. அங்குள்ள இந்துக் கோவில்கள் இடிக்கப்படுகின்றன. இந்துக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது. சனாதன தர்மத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை சமாளிக்க நாம் இணைந்து செயல்பட வேண்டும்"- என்றார். (எ)

# ரஷ்யாவுக்குள் திடீரென நுழைந்து உக்ரைன் படையினர் தாக்குதல்!

## பல மணிநேரம் நீடித்த மோதல்

டெல் அவில், ஓக. 09



உக்ரைன் இராணுவத்தை சேர்ந்த 300 பேர் எல்லையை கடந்து ரஷ்யாவுக்குள் நுழைந்து தாக்குதலை மேற்கொண்டனர். இவர்கள் சுமார் 10 கிலோ மீற்றர் வரை ஊடுருவினர் என ரஷ்ய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

11 ராங்கிகள், 20இற்கும் மேற்பட்ட கவச வாகனங்களின் உதவியுடன் இந்தத் தாக்குதலை உக்ரைன் படையினர் முன்னெடுத்தனர் என ரஷ்ய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கேர்க்ஸ் பிராந்தியத்தின் எல்லைக் கிராமங்களிலும், முன்னரங்குகளில் இருந்து பத்து கிலோமீற்றர் உள்ளேயும் பல மணிநேரம் இந்த மோதல்கள் நீடித்தன என்று ரஷ்ய படையினர் தெரிவித்தனர். (எ)

# இராணுவம் தலைமை வகிக்கும் அரசை எம்மால் ஏற்க முடியாது

## பங்களாதேஷில் போராடும் மாணவர்கள் உறுதி

டாக்கா, ஓக. 09

இராணுவம் தலைமை தாங்கும் இடைக்கால அரசாங்கத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என பங்களாதேஷில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் தெரிவித்தனர்.

இடைக்கால அரசாங்கமொன்று ஏற்படுத்தப்படும் அதன் பின்னர் தேர்தல் நடைபெறும் என பங்களாதேஷின் இராணுவத் தளபதி அறிவித்திருந்த நிலையிலேயே மாணவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இராணுவம் தலைமைவகிக்கும் அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

நோபல் பரிசு பெற்ற முகமட் யூனுஸ் இடைக்கால அரசாங்கத்தின் ஆலோசகராக மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் எனவும் மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் தலைமையிலான கூட்டணி தேர்தலில் அமோக வெற்றியீட்டும்!

## தயாசிறி ஜயசேகர நம்பிக்கை



கொழும்பு, ஒக. 09

**எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணி, அமோக வெற்றியீட்டும் என சிறீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

தயாசிறி ஜயசேகர தலைமையிலான கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் முற்பகல் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மைத்திரிபால சிறிசேன சுதந்திரக்கட்சியை வீழ்ச்சிநிலைக்கு இட்டுச் சென்ற ஒருவர்.

சுதந்திரக்கட்சியின் செயலாளராக இருந்த அவர் பிற்காலத்தில் ஜனாதிபதியானார். ஒன்பது தரை வருடங்கள் அவர் கட்சியின் தலைவராக இருந்தவர். இந்த ஒன்பது வருடத்தில் அவர் சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளார்.

சுதந்திரக்கட்சி இன்று பல வழிகளில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு சிலர் பலவந்தமாக கட்சியின் அதிகாரத்தை கையில் எடுத்துள்ளனர்.

ஆனால் கட்சியின் செயலாளர் நானே. எனவே எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதியன்று நாம் சஜித் பிரேமதாச தலைமையில் தேர்தலில் அமோக வெற்றியீட்டுவோம்.

அதன்பின்னர் சுதந்திரக் கட்சி மீண்டும் கட்டியெழுப்பப்படும். சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணியினருக்கு இந்த நாட்டை கட்டியெழுப்பக்கூடிய வல்லமை உள்ளது. மக்கள் ஆணையுடன் இந்த நாட்டை வழிநடத்த தயாராக உள்ளோம்-என்றார். (அ)

# பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் வழங்கும் விழா

யாழ்ப்பாணம், ஒக. 09

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் விழா எதிர்வரும் சனிக்கிழமை 9 மணிக்கும் 11.30 மணிக்கும் என இரண்டு அமர்வுகளாக கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி.யோண் குயின்ரஸ் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் 238 ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய தகைமைப் பத்திரங்களைப் பெறவுள்ளதாக கலாசாலை அதிபர் தெரிவித்தார். (அ)

# அரிசி தட்டுப்பாடு இல்லை!

கொழும்பு, ஒக. 09

இம்முறை சிறுபோகத்தின் போது 2 மில்லியன் டொன் நெல் அறுவடை செய்யப்படும் என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

4 இலட்சத்து 80,000 ஹெக்ரேயர் வயல் நிலப்பரப்பில் 77 சதவீதம் நாடு நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

11 சதவீதம் சம்பா நெற்செய்கையும், 12 சதவீதம் கீரி நெற்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரும்போக நெல் அறுவடையும் நாட்டில் இருப்பதால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மக்கள் முறைப்பாடுகளை விசாரிக்க சுங்க உள்விவகாரப் பிரிவு ஆரம்பம்!

கொழும்பு, ஒக. 09

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பொது முறைப்பாடுகளைப் பெற்று விசாரணை செய்வதற்கான உள்விவகாரப் பிரிவு நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் திறந்து வைக்கப்பட்டது. பொதுமக்களுக்கும் சுங்கத்துக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதே இதன் நோக்கம் என அமைச்சர் குறிப்பிட்டார். கொடுக்கப்பட்ட வருவாய் இலக்குகளுக்கு அப்பால் சென்ற சுங்கத் திணைக்களம் நாட்டிற்கு தனித்துவமான பணியை செய்து வருவதாகவும் அதன் காரணமாக பல்வேறு பாராட்டுக்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார். எனவே, இப்பிரிவு பொதுமக்களுக்கும் திணைக்களத்துக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் என சுட்டிக்காட்டிய அமைச்சர், எதிர்காலத்தில் உள்ளூர் வருவாய் மற்றும் கலால் திணைக்களங்களுக்கும் இந்த முறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். (அ)

# தேசிய நலன் கருதியே சு.கவுடன் கைகோப்பு

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார



கொழும்பு, ஒக. 09

"தேசிய நலன் கருதியே சுதந்திரக்கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளோம்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகர தலைமையிலான கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் முற்பகல் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக்கட்சியுடன் கடந்த காலங்களில் நாங்கள் பெரிதளவில் தொடர்புபட்டவர்கள் அல்ல. எனினும் தேசிய நலன் கருதி இன்று சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளோம்.

இரு வேறு திசைகளில் பயணித்த நாம் இன்று ஒரு திசையில் பயணிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளோம்.

மக்கள் ஆணையூடாக தெரிவு செய்யப்படும் ஒருவரே இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும். அதனையே நாமும் எதிர்பார்க்கின்றோம். சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் அனைத்து மக்களுக்கும் சிறந்த எதிர்காலம் அமையும்-என்றார். (அ)

# வீதிகளில் இறங்கி கோஷமிடுவதால் வறுமை நிலையை ஒழிக்க முடியாது!

## கூறுகிறார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஒக. 09

"நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் வீதிகளில் இறங்கி கோசமிடுவதால் ஒருபோதும் மக்களின் வறுமையை ஒழிக்க முடியாது" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கூட்டுறவு இயக்கத்தின் எதிர்கால போக்கு குறித்து, கலந்துரையாடும் வகையில் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த சந்திப்பானது நேற்று முன் தினம் கொழும்பிலுள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் இந்த நாட்டில் கூட்டுறவு இயக்கம் மிகவும் வலுவாக இருந்தது. ஆனால் 1970 சீர்திருத்தங்களுக்குப் பின்னர் அந்த நிலை மாறியது.

கூட்டுறவுச் சட்டத்தை மாற்ற யாரும் முன்வரவில்லை. இது பற்றி ஒருமுறை அமைச்சரவையில் நான் கேள்வி எழுப்பினேன். ஆனால் அந்த அதிகாரத்தை விட்டுக்கொடுக்க அமைச்சின் அதிகாரிகள் விரும்பவில்லை. இன்று அது அரசியலாகிவிட்டது.

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் அதிகாரத்தை கைப்பற்ற உறுப்பினர்கள் முன் வருகின்றனர். இது பெரிய நகைச்சுவையாகிவிட்டது. மக்களுக்காக என்று கூறிக் கொண்டு மக்கள் இயக்கத்தை அழிக்கிறார்கள். ஏனைய கூட்டுறவு அமைப்புகளும் முழுமையாக செயல்படவில்லை.

எனவே, கூட்டுறவு வணிகம் குறித்து புதிதாக சிந்திக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை நாம் 16 முறை இடைநடுவில் கைவிட்டுள்ளோம்.

எனவே இதனை 17ஆவது தடவையாக மீறினால் மீண்டும் நடைமுறைப்படுத்தப் படமாட்டாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அதன்படி முதன்முறையாக அந்த விடயங்களை சட்டத்தில் இணைத்து பொருளாதார பரிமாற்ற சட்டத்தை முன்வைத்துள்ளோம். அந்தப் பின்னணியில் நாம் பணியாற்ற வேண்டும்.

சர்வதேசத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் நாம் அதனை தொடர வேண்டும்-என்றார். (அ)



# இலங்கையின் முதல் தொலைக்காட்சி செய்தித் தொகுப்பாளர் காலமானார்

கொழும்பு, ஒக. 09

நீண்ட நாட்களாக உடல்நல குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இலங்கையின் முதல் தொலைக்காட்சி செய்தி தொகுப்பாளரான சிரேஷ்ட ஊடகவியலாளர் சுமனா நெல்லம்பிட்டிய தனது 80ஆவது வயதில் காலமானார்.

தனது ஊடக வாழ்க்கையை ஆரம்பிக்கும் முன்னர் விமானப் படை அதிகாரியாக சுமனா நெல்லம்பிட்டிய கடமையாற்றியிருந்தார்.

சுமனா நெல்லம்பிட்டிய 1962ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி வானொலி நிலையத்தில் உதவி அறிவிப்பாளராக இணைந்துகொண்டார்.

இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் முதல் பெண் செய்தி வாசிப்பாளர் சுமனா நெல்லம்பிட்டிய ஆவார்.

அந்த நேரத்தில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி மற்றும் தேசிய தொலைக்காட்சியில் முதல் செய்தி தொகுப்பாளராகவும் பணியாற்றியிருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவையிடம்...

நிறுத்துகின்றன.

இதன்படி, தமிழ்ப் பொது வேட்பாளராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பா. அரியநேத்திரன் நேற்று வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டார். பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், அரியநேத்திரன் மாவிட்டபுரத்திலுள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவின் இல்லத்துக்கு சென்று அவரிடம் ஆசீர்வாதம் பெற்றார். (ஐ)

## தமிழ் பொது வேட்பாளர்...

பா.அரியநேத்திரன் நேற்று அறிவிக்கப்பட்டார். இது தொடர்பில் அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. இதில், கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு 75 முதல் 80 பேரின் பெயர்களை பரிசீலித்தே அரியநேத்திரனை தெரிவு செய்துள்ளோம். இலங்கை தமிழ் அரசு கட்சியை சேர்ந்த பலரும் எமக்கு ஆதரவை தெரிவித்துள்ளனர். கட்சியின் முடிவு ஓரிரு நாட்களில் வெளிவரும் என நம்புகிறோம். நாம் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகிறோம். எம்முடன் இணைந்து பயணிக்க விரும்புவோர் பயணிக்க முடியும்.

எமது பொது வேட்பாளர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் என்பதனால் சுயேச்சையாக போட்டியிட முடியும் - அதனால், அவர் சுயேச்சையாகவே போட்டியிடுகிறார். இன்னமும் ஓரிரு நாட்களில் வேட்பாளருக்கான கட்டுப்பணத்தை செலுத்துவோம் - என்றார். (ஐ)

## தமிழ்...

அமைப்புகளின் ஒன்றிணைவான தமிழ் மக்கள் பொதுக்கட்டமைப்பு என்பன இணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்தன. இது தொடர்பான பேச்சுகள் - உடன்படிக்கைகள் நடைபெற்று வந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளர் யார் என்பதைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் அண்மை நாட்களாக தீவிரமாக நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, நேற்று வியாழக்கிழமை தமிழ் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் அறிவிக்கப்பட்டார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இவர், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர். கிழக்கு மாகாணத்தின் முன்னணி ஊடகவியலாளராக பணியாற்றிய அரியநேத்திரன் வடக்கு மாகாணத்தில் செல்வராஜா கஜேந்திரனைப் போன்று கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டவர்.

2004, 2010ஆம் ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்தனர். இவர் இலங்கை தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்தவர் என்பதுடன் அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவராகவும் மத்திய குழு உறுப்பினராகவும் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஜனநாயக தமிழத் தேசியக் கூட்டணியின் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்), தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி என்பனவும் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் என்பன ஆதரிக்கின்றன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனது உத்தியோகபூர்வ அறிவிப்பை இன்னமும் விடுக்காத போதிலும் அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சிறீதரன் போன்ற முக்கிய தலைவர்கள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து வருகின்றனர். (ஐ)

## ஐக்கிய...

தரப்பினர் உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.

எனினும், இந்தக் கூட்டணியில் முன்னர் அங்கம் வகித்த ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. அந்தக் கட்சி யாருக்கு ஆதரவு அளிப்பது என்பதில் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. அடுத்த வாரமே யாருக்கு ஆதரவு என்று முடிவு எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிகழ்நிலை...

இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னர் துறைசார் நிபுணர்கள் சட்ட மூலத்தின் ஒருசில பிரிவுகள் பற்றிய திருத் தங்களை முன்மொழிந்திருப்பினும் குழு நிலை விவாதத்தின்போது அவ்வாறான திருத்தங்களை சட்டமூலத்தில் சேர்த்துக் கொள்வதற்கு முடியவில்லை.

இதற்கமைய, இந்தத் திருத்தங்களை உள்ளடக்கி 2024 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்பு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 2024.02.12 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதற்கிணங்க, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்தது. இதையடுத்து, அந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க கடந்த ஜூலை 22ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கமைய நேற்று வியாழக்கிழமை குறித்த திருத்தச் சட்ட மூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. (ஐ)

## வடக்கின்...

அவசர சிகிச்சை பிரிவை நிறுவுமாறு மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், அவசர சிகிச்சைப் பிரிவுக்கான ஆளணியை நியமிக்குமாறும் உரிய பயிற்சிகளை வழங்குமாறும் ஆலோசனை வழங்கினார். அத்துடன், மருத்துவமனைகளை ஒருங்கிணைப்பதற்கான தரவு பொறி முறை ஒன்றை விரைவில் அறிமுகப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் கூறினார்.

சுகாதாரத்துறைக்கு தேவையான ஆளணி, வளப்பற்றாக்குறை, தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கையை விரைவில் சமர்பிக்கு மாறும் மாகாண சுகாதார பணிப்பாளருக்கு ஆளுநர் உத்தரவிட்டார். (ஐ)

## பிரதமர்...

அநுராதபுரத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் அறகலய போராட்டம் நடந்தபோது நாட்டை அமைதிப்படுத்தி - அதனைக் கட்டியெழுப்புவதற்காக அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2022 மே மாதம் 12 திகதி ஒரு தீர்மானத்தை எடுத்து அரசாங்கத்தின் பிரதமர் பதவியை ஏற்குமாறு எனக்கு அழைப்பு விடுத்தார்.

என்றாலும், அதனை அறிந்த பொதுஜன பெரமுன கட்சியினர் குழப்பமடைந்து ரணில் விக்கிரமசிங்கவை அவசரமாக அழைத்து வந்து ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்ததால் அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. நான் பிரதமராகும் வாய்ப்பை பொதுஜன பெரமுனவே இல்லாமல் செய்தது." என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இலக்கத் தகடுகளை...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

காணாமல் போனோர் பணிமனை (ஓ. எம். பி.) சார்பில் அதன் சட்டத் தரணிகளும் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ரட்ணவேல், நிரஞ்சன் ஆகியோர் முற்பட்டனர். இதேநேரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

நீதிமன்றம் பணித்ததன்படி, புதைகுழி அகழ்வு தொடர்பில் கொக்குத் தொடுவாய் கிராம உத்தியோகத்தர் அறிக்கையை சமர்ப்பித்தார்.

தொடர்ந்து, இந்த மனிதப் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட 25 எலும்புக் கூட்டு தொகுதிகளும் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவபீட கட்டடத்தில் உள்ள சட்ட மருத்துவ பிரிவுக்கு இடமாற்றப்பட்டு கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் பகுப்பாய்வு பணிகள் நடந்தன. இந்தப் பாகுப்பாய்வு பணிகள் எதிர்வரும் வாரங்களில் தொடர்ந்து நடைபெறவுள்ளன என்று சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணிமனை புதைகுழி அகழ்வு நடந்த இடத்தை பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு அடுத்த வழக்கு தவணையில் முடிவுக்கும் வரும் என்று நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார்கள்.

இதேநேரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் சில விண்ணப்பங்களை முன்வைத்தனர்.

தடயவியல் பொலிஸாரால் எடுக்கப்பட்ட குறிப்புகள் நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதிகள் மற்றும் சான்றுகள் பாதுகாக்கப்பட வேண்டும். அகழ்வின்போது மீட்கப்பட்ட இலக்கத்தகடுகளை துலாம்பரமாக பத்திரிகைகளில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற பதிவாளரினால் பிரசுரிக்கப்படவேண்டும் - அந்த இலக்கங்கள் அதனோடு இணைந்த போராளிகளுக்கும் உறவினர்களுக்கும் குடும்பத்தாருக்கும் தெரியும் என்ற அடிப்படையில் அவர்கள் அந்த தகவல்களை நீதிமன்றுக்கு தெரிவிப்பதன் மூலம் ஆய்வுப்பணிகளையும் அந்த புதைகுழி தொடர்பான காலப்பகுதியையும் கண்டுபிடிப்பதற்கு இலகுவானது என்றும் அந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, கொக்குத்தொடுவாய் வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

## தமிழ் தேசிய குறியீடாகவே...

வேட்பாளராக போட்டியிடவுள்ள பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்ப் பொது வேட்பாளரை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பை தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடத்தியது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு,

ஈழமண்ணில் எமது மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். நெடுங்காலமாக உரிமையற்ற இனமாக நாம் இருக்கிறோம். எமக்கான உரிமை கிடைக்க வேண்டும் என்பதை தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் வலியுறுத்தும் அடையாளமாக மாத்திரமே நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன். எனது பணி செப். 22ஆம் திகதி வரையே இருக்கும். அதற்கு பிற்பாடு வரும் பணிகளை பொதுக் கட்டமைப்பு முன்னெடுக்கும்.

தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன், சம்பந்தன் ஆகிய தலைவர்களால் நாம் வழிநடத்தப்பட்டவர்கள். 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானம் எடுத்தபோது, அதற்காக மக்கள் திரண்டு வாக்களித்து அதுதான் எமது கொள்கை என்று வெளிப்படுத்தியிருந்தார்கள். 2000ஆம் ஆண்டு ஆரம்பித்த முயற்சி 2001இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தோற்றம் பெற்றிருந்தது. 2004ஆம் ஆண்டு 22 பாராளுமன்ற உறுப்பினர்களை நாம் பெற்றும் மக்கள் சக்தியை காட்டியிருந்தோம். இந்த இரண்டு தேர்தல்களிலும் நாம் வெற்றி பெற்றிருந்தோம்.

2009 மே 18இற்கு பின்னர் ஆயுதப் போராட்டம் மௌனித்ததன் பின்னர் எமது போராட்டம் இராஜதந்திர ரீதியாக செயல்வடிவம் பெற்றுள்ளது. தமிழீழ புலிகளின் தியாகம் - தமிழ் மக்களின் தியாகம் - தந்தை செல்வா காட்டிய வழி என்று நாம் பயணிக்கிறோம். ஆனால், இந்த 15 ஆண்டுகளில் நாம் பெற்றது என்ன?

பிரச்னைத் தீர்வுக்கு சர்வதேசம் எம்மை ஒரே குரலில் பேசுமாறு கூறுகின்றது. இதற்கு வழிஎன்ன ஒருமித்த குரலில் - ஒரே குரலில் நாம் பேசவும் - தமிழ் மக்களுக்கு பிரச்னை உண்டு என்று காட்டவும் இந்த ஜனாதிபதித் தேர்தல் அதற்கு வாய்ப்பாக உள்ளது.

மேலும், 2005 இலேயே ரணிலை பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் கூறியிருந்தார்கள். பல காலமாக எம்மை ஏமாற்றி வரும் ரணிலுக்கு வாக்களிக்கப் போகின்றோமா...?

சஜித் பிரேமதாஸ என்ன செய்தார்? புத்த சாசன அமைச்சராக இருந்து ஆயிரம் பௌத்த விகாரைகளை வடக்கு, கிழக்கில் அமைப்பதற்கு அங்கீகாரம் கொண்டுவந்தார். இன்றுவரை அந்த செயல்பாடு தொடர்கிறது அவ்வாறானவருக்கு வாக்களிக்க வேண்டுமா?

அநுர குமார திஸநாயக்க இணைந்த வடக்கு - கிழக்கை பிரிக்கத் துணையாக இருந்தார் - வன்னி இறுதிப் போரின் போது அவரும் இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கியவரே. அடுத்த வேட்பாளர், நாமல் ராஜபக்ஷ மகிந்தவின் புதல்வர். 13ஐயே தரமாட்டேன் என்று கூறும் இனவாதி. இவர்களுக்கா நாம் வாக்களிப்பது?

கடந்த காலத்தில் எமக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போரில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் 3 இலட்சம் மக்களை இழந்துள்ளோம் - இன்றும் உரிமையற்ற இனமாக இருக்கிறோம். 8 ஜனாதிபதிகளிடம் ஏமாந்தபிறகு இன்னும் நாம் பேரம்பேசப் போகின்றோம் என்றால் இதை கேட்கும் நாம் மடையர்களா...? தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும் - என்றார். (ஐ)

## நல்லூரானுக்கு...

மணிக்கு மஞ்சத் திரு விழாவும் 26ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.45 மணிக்கு கார்த்திகை திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6.45 மணிக்கு சூர்யோற்சவமும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 23ஆம் திருவிழாவான எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 6.15 மணிக்கு தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் செப்ரெம்பர் 2ஆம் திகதியான திங்கட்கிழமை காலை 6. 15 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அநுரகுமாரவின் தரப்பிலிருந்து சஜித் தரப்புக்கு கொலை மிரட்டல்

## காலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 09

**ஜே.வி.பியின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் ஒருவர் மூலம் காலி ஹாலிவல பிரதேசத்தில் வசிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக காலி மாவட்ட தேர்தல் முறைப்பாடுகளை வழங்கும் நிலையத்துக்கு முறைப்பாடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான முறைப்பாடு வழங்கியவர் காலி ஹாலிவலயில் காணப்படும் தனது வீட்டுக் காணியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு நன்கொடையாக தேர்தல் காரியாலயம் ஒன்றை திறக்க எதிர்பார்த்துள்ளார்.

அதன்போது காலி பட்டதுவ பிரதேசத்தில் வசிக்கும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் செயற்பாட்டாளர் ஒருவர் தனது மனைவியுடன் வந்து ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயம் ஒன்றை திறந்தால் கொலை செய்வதாக மிரட்டல் விடுத்ததாக முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் காலி பொலிஸின் தேர்தல் பிரிவுக்கு இந்த முறைப்பாட்டை முன்னிலைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அரச, தனியார்துறைகளுக்கு மேலதிகமாகப் புதிய துறை!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 09

அரச மற்றும் தனியார் துறைகளுக்கு மேலதிகமாக மக்கள் துறையொன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்களை பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்காக இந்த துறை உருவாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கூட்டுறவு இயக்கத்தை மக்கள் துறையின் இயக்கியாக மாற்றும் வகையில் நாட்டில் சுதந்திரமான வலுவான கூட்டுறவு இயக்கம் கட்டியெழுப்பப்பட்டு வருவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை அடுத்த வருடம் முதல் வாகன இறக்குமதிக்கு படிப்படியாக அனுமதி வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் அறிவித்துள்ளார்.

இந்த முடிவு சுங்க வரி மூலம் அரசாங்க வருவாயை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, நாட்டின் வெளிநாட்டு கையிருப்புகளை ஆதரிப்பதற்காக வருமானம் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். (அ)

# குழந்தைகளுக்கிடையே உறக்கமின்மை பிரச்னை!

கொழும்பு, ஓக. 09

இலங்கையில் குழந்தைகளுக்கிடையே உறக்கமின்மை பிரச்னைகள் காணப்படுவதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சுகாதார நிபுணர் வைத்தியர் இனோகா விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் இந்த விடயம் மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிள்ளைகளுக்கு நல்ல உறக்கத்தைக் கொடுப்பதற்குத் தேவையான விடயங்களைச் செய்வது பெற்றோரின் பொறுப்பாகும்.

இலங்கைச் சிறுவர்கள் மத்தியில் உறக்கம் குறித்து அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றாலும், கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட தரவுகளின்படி, 25 வீத குழந்தைகளுக்கு ஒரு வயதுக்குள் உறக்கமின்மை பிரச்னை உள்ளது. இதேவேளை, இளைஞர்கள், பெரியவர்கள் மற்றும் இளம் வயதினருக்கு தூக்கமின்மையின் விளைவுகள் உள்ளன.

இந்நிலையில், ஒவ்வொரு வயதினருக்கும் ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் உறங்க வேண்டும் என்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

அதன்படி, பிறந்த மூன்று மாதங்களில், குழந்தைகள் சுமார் 14 முதல் 17 மணி நேரம் தூங்க வேண்டும்.

4 மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை, 12 முதல் 16 மணி நேரம், ஒரு வருடம் முதல் 2 ஆண்டுகள் வரை, 11 முதல் 14 மணி நேரம், 5 வயது குழந்தைக்கு 10 முதல் 13 மணி நேரம் வரை 50மூ உறக்கம் தேவை. இதேவேளை, வயது வந்தவர் குறைந்தது 7 மணி நேரம் தூங்க வேண்டும்.

இவ்வாறு ஒழுங்கான உறக்கம் இன்மை மனம் மற்றும் உடலின் ஆரோக்கியத்தையும், வளர்ச்சியையும் பாதிக்கிறது - என்றார். (அ)

# இன்று விசேட அறிவிப்பை வெளியிடும் பொன்சேகா!



கொழும்பு, ஓக. 09

சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இன்று வெள்ளிக்கிழமை விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த பீல்ட் மார்ஷல் பொன்சேகா, தனது அரசியல் எதிர்காலம் குறித்து தனது விசேட அறிக்கை வெளியிடவுள்ளதாக கூறினார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பொன்சேகா, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரைச் சந்தித்த பின்னர் நாட்டை வந்தடைந்த போது இதனை தெரிவித்தார். (அ)

# எமில் ரஞ்சன் விடுதலை!



கொழும்பு, ஓக. 09

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் கைதி ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவுக்கு கொழும்பு மேல்நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் அமர்வால் வழங்கப்பட்ட மரண தண்டனையிலிருந்து விடுவித்து உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

தண்டனைக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட பிரதிவாதி லமாஹேவா முன்வைத்த மேன்முறையீட்டை ஏற்றுக்கொண்ட ஐவர் அடங்கிய உயர் நீதிமன்ற, நீதியரசர்கள் அமர்வால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# பொலித்தீன் பாவனை ஒழிப்பு; மாணவர்கள் நேற்று கவனவீர்ப்பு!



வடமராட்சி, ஓக. 09

பொலித்தீன் பாவனையை ஒழிக்க வலியுறுத்தி வடமராட்சி கிழக்கு - தாளையடி றோ. க. த. க. பாடசாலை மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில் நேற்று வியாழக்கிழமை நடந்த இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் பேரணியை தொடர்ந்து பாடசாலையின் பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள பொலித்தீன் மற்றும் உக்காத கழிவு பொருட்கள் மாணவர்களால் அகற்றப்பட்டன.

பேரணியில் வடமராட்சி கிழக்கு பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் நிருபனும் பங்கேற்றிருந்தார். (ஐ- 02)

# திருக்குறள் மாநாடும் கலைவிழாவும்

யாழ்ப்பாணம், ஓக. 09

இணுவில் அறிவாலயத்தின் திருக்குறள் மாநாடும் கலைவிழாவும் நாளை சனிக்கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

இணுவில் அறிவாலயத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் காலை அமர்வு 8.30 மணிக்கும் மாலை அமர்வு பிற்பகல் 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

தொடக்க நிகழ்வாக திருவள்ளுவர் திருவுருவச் சிலை இணுவில் கோவில் வாசல் சந்தியிலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இணுவில் அறிவாலயம் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தொடக்கவுரையாற்றுவார்.

தொடர்ந்து சிறப்புரைகள், பட்டிமன்றம் என்பன நடைபெறும். மாலை அமர்வில் இசையரங்கு, நடன ஆற்றுகை என்பன நிகழ்த்தப்படவுள்ளன. (ஐ)

# டிப்பர் வாகனத்தினுள் மறைத்து கடத்தப்பட்ட மரக்குற்றிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 09

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சூட்சுமமாக மறைத்து கடத்திச் செல்லப்பட்ட மரக்குற்றிகளுடன் டிப்பர் வாகனம் ஒன்றை நேற்றுக் காலை 9 மணியளவில் கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியதுடன் இருவரை கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கொடிகாமம் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி தலைமையில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

குறித்த டிப்பர் வாகனத்தினுள் மரக்குற்றிகள் அடுக்கப்பட்டு அதற்கு மேல் சிறிய கற்கள் ஏற்றப்பட்டு சூட்சுமமான முறையில் கடத்தப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான 24 தேக்கு மரக் குற்றிகளே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டன.

சம்பவத்தில் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் அஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மொட்டு பொருளாளரும் ரணிலுக்கு முழு ஆதரவு!



கொழும்பு, ஓக. 09

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்டத்தின் பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த தீர்மானத்தை எடுத்ததாக பவித்ரா வன்னியாராச்சி அறிக்கை யொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் பொருளாளராகவும் பவித்ரா செயற்பட்டுவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை தலைமை முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org